நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்.

முன்னிலை: திரு.கே.குமாரசிவம், பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர், சத்தியமங்கலம்.

2048 திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் தை மாதம் 18 ஆம் நாள்
2018 ம் வருடம் ஜனவரி மாதம் 31 ஆம் நாள் புதன்கிழமை

M.C.No.01/2017

1. கருப்பகவுண்டர்,
2. பழனியம்மாள். .....மனுதாரர்கள்

/எதிர்/

1. பழனிச்சாமி,
2. அம்பிகா. .....எதிர்மனுதாரர்கள்

இம்மனு 01.02.2017 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 27.12.2017 அன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.க.தங்கராசன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரரை பொறுத்து கடந்த 18.04.2017 ம் தேதி அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.சி.அஜீத்குமார் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.14,000/- ஜீவனாம்சம் வழங்க உத்தரவிட வேண்டி கு.வி.மு.ச.பிரிவு 125 ன்படி மனுதாரர்களால் மனுதாக்கல்.

2. <u>மனுதாரர்களின் மனு உரைச் சுருக்கம்:</u>

எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரர்களின் மகன் மற்றும் மகள் என்றும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு திருமணம் செய்து கொடுத்து நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும், 1 ம் எதிர்மனுதாரருக்கு

2 மகன்களும், 3 ம் எதிர்மனுதாரருக்கு 2 மகள்களும் உள்ளார்கள் என்றும், 1 ம் மனுதாரர் கஷ்ட ஜீவனம் செய்து வந்த வருமானத்தின் மூலம் 22.06.1972 ம் வருடம் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண் 1448/1972 ன்படி 6 ஏக்கர் பூமியினை கிரயம் பெற்று விவசாயம் செய்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு எதிர்மனுதாரர்களை காப்பாற்றியும், 1 ம் எதிர்மனுதாரரை 7 ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், 2 ம் எதிர்மனுதாரரை 11 ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், 2 ம் எதிர்மனுதாரருக்கு 7 பவுன் நகை போட்டு திருமண செலவுகள் செய்து திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றும், மனுதாரர்கள், 1 ம் எதிர்மனுதாரருக்கு திருமணச் செலவுகள் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றும், 2 ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் ஆகாததற்கு முன்பே 1 ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதியினை உயில்மூலம் எழுதி வைத்துள்ளார் என்றும், 1 ம் மனுதாரர் கிரையம் பெற்ற 6 ஏக்கர் பூமியில் 2 ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கிய உயில் பூமியில் மனுதாரர் தார்சு வீடு கட்டி 2 ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு மேற்படி வீட்டில் நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் 1 ம் மனுதாரர் வீடுகட்டி வைத்தார் என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு 2 ம் எதிர்மனுதாரரும், அவரது கணவரும் ஆசை வார்த்தைகள் கூறி உயில் எழுதி வைத்ததை ரத்து செய்து விட்டு மேற்கண்ட உயில் பூமியினை 2 ம் எதிர்மனுதாரர் பெயரில் 19.11.2008 ம் தேதியில் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவணத்தில் 3 ஏக்கர் பூமியினை 1 ம் மனுதாரர் 2 ம் எதிர்மனுதாரர் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், 1 ம் மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரருக்கு 30.04.2009 ம் தேதியில் மீதமுள்ள 3 எக்கர் பூமியினை சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண் 2061/2009 ன் மூலம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றும், எதிர்மனுதாரர்கள் இருவரும் சிறிது காலம் தனித்தனியாக மனுதாரர்களை பராமரித்து வந்தும், தற்சமயம் 8 மாதங்களாக எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரர்களை கவனிக்காமலும் அவர்களுக்கான உண்ண உணவு, உடுக்க உடை, மருத்துவ வசதி, இருப்பிடவசதி எதுவும் செய்து கொடுக்காமல் மனுதாரர்களை எதிர்மனுதாரர்கள் விரட்டிவிட்டுவிட்டார்கள்.

மனுதாரர்கள் இருவரும் கஷ்ட ஜீவனம் செய்து வாடகை வீட்டில் தனியாக குடியிருந்து போராடி வருகிறார்கள் என்றும், 1 ம் மனுதாரருக்கு இருந்த 6 ஏக்கர் பூமியினை எதிர்மனுதாரருக்கு சரிசமமாக பிரித்து கொடுத்து விட்டு மனுதாரர்களுக்கென்று எவ்வித பூமியும் வைத்துக் கொள்ளவில்லை. மனுதாரர்கள் முதுமையின் காரணமாக உழைக்கவும் திறனற்றுபோய் உள்ளார்கள் என்றும், 2 ம் எதிர்மனுதாரர் 1 ம் மனுதாரர் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியை 23 லட்சத்திற்கு விற்பனை செய்து, அதன்மூலம் வந்த பணத்தினைக் கொண்டு 2 ம் எதிர்மனுதாரர் வசிக்கும் இடமான அரை ஏக்கர் பூமியினை வாங்கி அதில் வீடுகட்டி கோழி பண்ணை மற்றும் மாடுகள் வைத்து அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டிவருகிறார்கள் என்றும், 2 ம் எதிர்மனுதாரரின் கணவர் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ரூ.50000/-க்கும் மேல் சம்பளம் பெற்று வருகிறார் என்றும், சிறுக சிறுக சம்பாத்திய பணத்தையும் எதிர்மனுதாரர்கள் வாங்கிக் கொண்டு கையில் பணமில்லாமல் மனுதாரர்கள் சிரமப்படுகிறார்கள் என்றும், 1 ம் எதிர்மனுதாரர் 1 ம் மனுதாரர் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியில் நன்கு விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ரூ.50,000/-க்கு மேல் சம்பாத்தியம் ஈட்டி வருகிறார் என்றும், மனுதாரர்களின் நகையை விவசாயக்கடனுக்காக அடைமானம் வைத்து விவசாயம் செய்தும் மேற்படி கடன் தொகையான ரூ.70,000/- மாநில அரசின் கடன் தள்ளுபடி திட்டத்தால் 1 ம் எதிர்மனுதாரர் பயன்பெற்றும், மனுதாரர்களை பராமரிக்க புறக்கணிக்கிறார் என்றும், எதிர்மனுதாரர்களுக்கு நல்ல வசதிவாய்ப்பு இருந்தும், மனுதாரர்களை பராமரிக்காமல் வேண்டுமென்றே இருவரும் புறக்கணித்து வருகிறார்கள். எனவே மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் இருப்பிட வாடகைக்காக மாதம் ரூ.3,000/-ம், உணவிற்காக மாதம் ரூ.5,000/-ம் மருத்துவத்திற்காக மாதம் ரூ.3,000/-ம், உடுத்தும் உடைக்காக மாதம் ரூ.3,000/- ஆக மொத்தம் மாதம் ரூ.14,000/- வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர்கள் பணிவுடன் வேண்டுகிறார்கள்.

3. <u>2 ம் எதிர்மனுதாரரின் எதிர்மனு உரை சுருக்கம்:</u>

மனுதாரர்கள் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்திருக்கும் மனு மோசடி, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கக்கூடியதல்ல என்றும், 2 ம் எதிர்மனுதாரர் தனது எதிர்மனு உரையில் உண்மை என்று ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற மனு தொடர்பானவைகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரர்கள் மனுவில், எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் மகன் மற்றும் மகள் என்றும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களின் பெயரில் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளது உண்மை என்றும், மனுதாரர்கள் மனுவில், எதிர்மனுதாரர்களுக்கு திருமணம் செய்து கொடுத்து நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்று கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மேலும் 1 ம் எதிர்மனுதாரருக்கு 2 மகன்களும், 2 ம் எதிர்மனுதாரருக்கு 2 மகள்களும் உள்ளார் என்று கூறியுள்ளது உண்மையாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் 1 ம் மனுதாரர் கஷ்ட ஜீவனம் செய்து வந்த வருமானத்தின் மூலம் 22.06.1972 ம் தேதியன்று சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.1448/1972-ன்படி 6 ஏக்கர் பூமியினை கிரையம் பெற்று, விவசாயம் செய்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு என்னையும், 1 ம் எதிர்மனுதாரையும் காப்பாற்றியும், 1 ம் எதிர்மனுதாரரை 7 ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், தன்னை 11-ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், தனக்கு 7 பவுன் நகை போட்டு திருமண செலவுகள் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் தனக்கு திருமணம் ஆகாததற்கு முன்பே 1 ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதியினை உயில் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் 1 ம் மனுதாரர் கிரையம் பெற்ற 6 ஏக்கர் பூமியில் தனக்கு ஒதுக்கிய உயில் பூமியில் மனுதாரர் தார்சு வீடு கட்டி தான் திருமணத்திற்கு பின்னிட்டு மேற்படி வீட்டில் நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் 1 ம் மனுதாரர் வீடுகட்டி வைத்தார் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் திருமணத்திற்கு பின்னிட்டு தானும், தனது கணவரும் ஆசை

வார்த்தைகள் கூறி உயில் எழுதி வைத்ததை ரத்து செய்துவிட்டு மேற்கண்ட உயில் பூமியினை தனது பெயரில் 19.11.2008 ம் தேதியில் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவணத்தில் 3 ஏக்கர் பூமியினை 1 ம் மனுதாரர் தனது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்து விட்டார் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரருக்கு 30.04.2009 ம் தேதியில் மீதமுள்ள 3 ஏக்கர் பூமியை சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண் 2061/2009 மூலம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து விட்டார் என்று கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் எதிர்மனுதாரர்கள் இருவரும் சிறிது காலம் தனித்தனியாக மனுதாரர்களை பராமரித்து வந்தும் தற்சமயம் 8 மாதங்களாக எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரர்களை கவனிக்காமலும், அவர்களுக்கான உண்ண உணவு, உடுக்க உடை, மருத்துவ வசதி, இருப்பிட வசதி எதுவும் செய்து கொடுக்காமல் மனுதாரர்களை எதிர்மனுதாரர்கள் விரட்டி விட்டார்கள் என்றும் மனுதாரர்கள் இருவரும் கஷ்ட ஜீவனம் செய்து வாடகை வீட்டில் தனியாக குடியிருந்து போராடி வருகிறார்கள் என்றும் கூறியுள்ளது சுத்தப்பொய் என்றும், மனுதாரர்கள் 1 ம் மனுதாரருக்கு இருந்த 6 ஏக்கர் பூமியினை எதிர்மனுதாரர்களுக்கு சரிசமமாக பிரித்து கொடுத்துவிட்டு மனுதாரர்களுக்கென்று எவ்வித பூமியும் வைத்துக் கொள்ளவில்லை என்றும், மனுதாரர்கள் முதுமையின் காரணமாக உழைக்கவும் திறனற்றுப் போய் உள்ளார்கள் என்பது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் தான் 1 ம் மனுதாரர் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியை 23 லட்சத்திற்கு விற்பனை செய்து, அதன் மூலம் வந்த பணத்தைக் கொண்டு 2 ம் எதிர்மனுதாரர் வசிக்கும் இடமான அரை ஏக்கர் பூமியினை வாங்கி அதில் வீடு கட்டி கோழிப் பண்ணை மற்றும் மாடுகள் வைத்து அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வருகிறேன் என்றும், தனது கணவர் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ரூ.50,000/-த்திற்கு மேல் சம்பளம் பெற்று வருகிறார் என்றும், சிறுக சிறுக சம்பாத்திய பணத்தையும் தானும், 1 ம் எதிர்மனுதாரரும் வாங்கிக் கொண்டு கையில் பணமில்லாமல் மனுதாரர்கள் சிரமப்படுகிறார்கள் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் 1 ம்

எதிர்மனுதாரர் 1 ம் மனுதாரர் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியில் நன்கு விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ரூ.50,000/-க்கு மேல் சம்பாத்தியம் ஈட்டி வருகிறார் என்றும், மனுதாரர்களின் நகையை விவசாயக் கடனுக்காக அடைமானம் வைத்து விவசாயம் செய்தும், மேற்படி கடன் தொகையான ரூ.70,000/-ம் மாநில அரசின் கடன் தள்ளுபடி திட்டத்தால் 1 ம் எதிர்மனுதாரர் பயன்பெற்றும், மனுதாரர்களை பராமரிக்க புறக்கணிக்கிறார் என்றும் கூறியுள்ளது உண்மையாகும் என்றும், மனுதாரர் மனுவில் நல்ல வசதி இருந்தும், மனுதாரர்களை பராமரிக்காமல் வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறேன் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் மனுதாரர்களுக்கு தாங்கள் இருப்பிட வாடகைக்காக மாதம் ரூ.3000/-ம், உணவிற்காக மாதம் ரூ.5000/-ம், மொத்தம் ரூ.14000/-ம் தாங்கள் மனுதாரர்களுக்கு கொடுக்க கடமைப்பட்டவர்களாவோம் என்றும், மேற்கண்ட ஜீவனாம்ச தொகையை தாங்கள் மாதம்தோறும் கொடுக்க முன் வராத நிலையில் மனுதாரர்கள் உயிர் வாழ்ந்திடுவது மிகவும் கடினமாகும் என்றும், மேற்கண்ட ஜீவனாம்சம் மனுதாரர்களுக்கு வாழ்வதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும் என்றும், மனுதாரர்களுக்கு இரு மக்கள் இருந்தும், கவனிக்க ஆள் இல்லாமல் வயதான காலத்தில் ஒருவருடைய உதவியும் இல்லாமல் வாழ்வதற்கு போராடி வருகிறார்கள் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், உண்மையில் 1 ம் மனுதாரர் பெயரில் 6 ஏக்கர் பூமி இருந்தது உண்மையாகும் என்றும், மனுதாரர்கள் இருவருக்கும் வயதாகி விட்ட காரணத்தால் அவர்களால் பூமியில் விவசாயம் செய்ய இயலாததால் தனக்கும், 1 ம் எதிர்மனுதாரருக்கும் தலா பு.ஏ.2.87 விஸ்தீரணம் உள்ள பூமி எழுதி வைப்பதாகவும், மீதி 26 செண்ட் இடத்தை அவரது மகளான தனக்கு பு.ஏ.2.87 பூமியை தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றும், மீதி இருந்த 13 செண்ட் பூமியை மனுதாரர்களின் ஜீவனாம்சத்திற்காக 1 ம் மனுதாரர் வைத்துக் கொண்டார் என்றும், பின்னிட்டு 1 ம் எதிர்மனுதாரர் மேற்படி 13 செண்ட் பூமியையும் சேர்த்து பு.ஏ.3.13 செண்ட் பூமியை 26 செண்ட் பூமியை 1 ம் மனுதாரரிடமிருந்து எழுதி பெற்றுக் கொண்டார் என்றும், பின்னிட்டு 1 ம் எதிர்மனுதாரர் சொத்தை

பெற்ற பின்னிட்டு பெற்றோர்கள் என்கிற முறையில் மனுதாரர்களை பராமரிக்காமல் விட்டுவிட்டார் என்றும், தான் திருமணம் முடிந்து கணவர் வீட்டில் வசித்து வந்த போதிலும் மனுதாரர்களை அவ்வப்போது கவனித்தும், பராமரித்தும் வந்தேன் என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரர்களோ, 1 ம் எதிர்மனுதாரரோ எவ்வித உதவியும், சீர் சிறப்பும் தனக்கு செய்ததில்லை என்றும், தனக்கு 1999 ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றும், பின்னிட்டு 2000 வருடம் முதல் மனுதாரர்கள் இருவரும் தனது வீட்டில் தனது பராமரிப்பில் தான் இருந்தார்கள் என்றும், 2001-ம் வருடம் 1 ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ரூ.10,00,000/- செலவு செய்து தான் வீடு கட்டினேன் என்றும், பின்னிட்டு விவசாய பூமியை ரூ.4,00,000/- செலவு செய்து சமன் செய்தார்கள் என்றும், மீண்டும் பூமியில் 4 முறை ஆழ்குழாய் கிணறு அமைத்ததற்கு தான் ரூ.4,00,000/- செலவு செய்தேன் என்றும், தான் மொத்தமாக ரூ.10,00,000/- 1 ம் மனுதாரருக்கு செலவு செய்துள்ளேன் என்றும், பின்னிட்டு 1 ம் மனுதாரர் 2 ம் மனுதாரருடன் சண்டை போட்டு அவரை தள்ளிவிட்டதால் 2 ம் மனுதாரருக்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும், அதற்கு 1 ம் மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரரும் அவரை பார்க்கவில்லை என்றும், தான் தான் ரூ.1,00,000/- செலவு செய்து 2 ம் மனுதாரருக்கு எலும்பு முறிவு சிகிச்சை அளித்து சரி செய்தேன் என்றும், பின்னிட்டு 1 ம் மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதில் அதற்கும் தான் தான் ரூ.1,50,000/- செலவு செய்து சரி செய்தேன் என்றும், தான் திருமணத்திற்கு பின்னிட்டும் கடந்த 14 வருடங்களாக மனுதாரர்களை நன்கு பராமரித்து அனைத்து செலவுகளையும் செய்து வந்தேன் என்றும், பின்னிட்டு 2008 ம் வருடம் 1 ம் மனுதாரர் தனக்கு எழுதி வைத்த சொத்தை விவசாயம் செய்வதற்கு சௌகரியம் இல்லாததால் விற்பனை செய்ய முடிவு செய்து 2009 ம் வருடம் விற்பனை செய்து விட்டேன் என்றும், சொத்து விற்று வந்த பணம் முழுவதும் தான் மேற்படி பூமியில் வீடு கட்டியதற்கும், பூமி சமன் செய்ததற்கும், ஆழ்குழாய் கிணறு அமைத்ததற்கும் வாங்கிய கடனை திருப்பி செலுத்தத்தான் போதுமானதாக இருந்தது என்றும், மேலும் குடும்ப பெரியோர்கள் கேட்டுக்

கொண்டதற்கு இணங்க தான் திருமணமான பெண்ணாக இருப்பினும், கடந்த 17.12.2008ம் தேதியன்று 1ம் மனுதாரர் பெயரில் ரூ.1,50,000/- சத்தியமங்கலம் பாரத ஸ்டேட் வங்கியில் டெபாசிட் செய்து வைத்தேன் என்றும், மேலும் 2ம் மனுதாரருக்கு 5 1/2 பவுன் நகை செய்து அணிவித்தேன் என்றும், இவை அனைத்தையும் மனுதாரர்கள் பெற்றுக் கொண்டு தான் எதுவுமே செய்யவில்லை என்று பொய்யாக கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், தற்பொழுதும் மனுதாரர்கள் வட்டிக்கு பணம் கொடுத்து வட்டி வசூல் செய்து வருகிறார்கள் என்றும், மேலும் மனுதாரர்கள் இருவரும் தான் எதை செய்தாலும் அவற்றை எல்லாம் பெற்றுக் கொண்டு 1ம் மனுதாரருடன் கூட்டு சேர்ந்து கொண்டு தன்னை சிரமப்படுத்தி பிரச்சனை செய்வதையே வாடிக்கையாக கொண்டுள்ளார்கள் என்றும், உண்மையில் தான் இரு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு சிரமப்பட்டு கஷ்டஜீவனம் செய்துவருகிறேன் என்றும், தனது கணவர் பெறும் சம்பளம் மனுதாரர்களுக்கும், மேற்படி சொத்திற்கும் நான் கடன்வாங்கி செலவுசெய்த தொகைக்கு வட்டி செலுத்தவே போதுமானதாக இல்லை என்றும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ளது போல் தனக்கு எவ்வித வருமானமும் இல்லை என்றும், தனது கணவர் ரூ.50,000/- சம்பாதிப்பதில்லை என்றும், தனக்கு மனுதாரர்கள் கூறியது போல் எவ்வித அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், தான் ஜீவனாம்சம் கொடுக்கும் நிலையில் இல்லை என்றும், தான் எவ்வளவு சிரமம் இருப்பினும் பெற்றோர்கள் என்கிற முறையில் மனுதாரர்களை நல்ல முறையில் இதுவரை வாழவைத்து வந்தேன் என்றும், மனுதாரர்கள் அதை புரிந்து கொள்ளாமல் தன்னை சிரமப்படுத்துகிறார்கள் என்றும், மேலும் திருமணம் செய்து வேறு வீட்டிற்கு வாழ சென்றுவிட்ட மனுதாரர்களின் மகளான தன்னிடம் ஜீவனாம்சம் கோருவதற்கு சட்டப்படி மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், சட்டப்படி மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்க 1ம்எதிர்மனுதாரர் மட்டுமே கடமைப்பட்டவர் என்றும், எனவே மேற்படி காரணங்களுக்காகவே மனுதாரர்களின் மனுவானது 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும் கூறியுள்ளார்.

4. கடந்த 17.11.2017 ம்தேதி 2 ம் மனுதாரரை பொறுத்து வழக்கு மேற்கொண்டு நடத்த விருப்பமில்லை என கூறி 2 ம் மனுதாரரை பொறுத்து மனு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. 1 ம் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் 1 முதல் 6 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை. எ.ம.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் 7 மற்றும் 8 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. ம.சா.1 கருப்பகவுண்டர் தனது சாட்சியத்தில், தான் மனுவில் 1 ம் மனுதாரர் என்றும், 2 ம் மனுதாரருக்காகவும் தானே வழக்கை முன்னின்று நடத்துகிறேன் என்றும், தான் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிர்மனுதாரர்கள் தன்னுடைய மகன் மற்றும் மகள் என்றும், தான் எதிர்மனுதாரர்களுக்கு திருமணம் செய்து கொடுத்து நல்ல நிலையில் வாழ்ந்து வரும் 1 ம் எதிர்மனுதாரருக்கு 2 மகன்களும், 2 ம் எதிர்மனுதாரருக்கு 2 மகள்களும் உள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில் மனுதாரர்களின் குடும்பஅட்டை நகல் ம.சா.ஆ.1 என்றும், 1 ம் மனுதாரரின் ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ. 2 என்றும், 22.06.1972 ம் தேதிய 1 ம் மனுதாரர் கிரையம் பெற்ற ஆவணம் நகல் ம.சா.ஆ.3 என்றும், 19.11.2008 ம் தேதி மனுதாரர் 2 ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர நகல் ம.சா.ஆ. 4 என்றும், 30.04.2009 ம் தேதி 1 ம் மனுதாரர், 1 ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர நகல் ம.சா.ஆ. 5 என்றும், 2 ம் மனுதாரரின் ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ. 6 என்றும் கூறியுள்ளார். மேலும் தான் கஷ்ட ஜீவனம் செய்து வந்த வருமானத்தின் மூலம் 22.06.1972 ம் வருடம் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண். 1448/1972 இன்படி 6 ஏக்கர் பூமியினை கிரையம் பெற்று, விவசாயம் செய்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு எதிர்மனுதாரர்களை காப்பாற்றியும், 1 ம் எதிர்மனுதாரரை 7 ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், 2 ம் எதிர்மனுதாரரை 11 ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், 2 ம் எதிர்மனுதாரருக்கு 7 பவுன் நகை போட்டு

திருமண செலவுகள் செய்து திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றும், தான் 1 ம் எதிர்மனுதாரருக்கு திருமணச் செலவுகள் செய்து திருமணம் செய்து வைத்தேன் என்றும், 2 ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் ஆகாதததற்கு முன்பே தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதியினை உயில்மூலம் எழுதி வைத்துள்ளேன் என்றும், தான் கிரையம் பெற்ற 6 ஏக்கர் பூமியில் 2 ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கிய உயில் பூமியில் தான் தார்சு வீடு கட்டி 2 ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு மேற்படி வீட்டில் நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் தான் வீடு கட்டி வைத்தேன் என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு 2 ம் எதிர்மனுதாரரும், அவரது கணவரும் ஆசை வார்த்தைகள் கூறி உயில் எழுதி வைத்ததை ரத்து செய்து விட்டு மேற்கண்ட உயில் பூமியினை 2 ம் எதிர்மனுதாரர் பெயரில் 19.11.2008 ம் தேதியில் சத்தியமங்கலம் சார்பதிவக அலுவலகத்தில் 3 ஏக்கர் பூமியினை தான் 2 ம் எதிர்மனுதாரர் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்து விட்டேன் என்றும், தான் 1 ம் எதிர்மனுதாரருக்கு 30.04.2009 ம் தேதியில் மீதமுள்ள 3 ஏக்கர் பூமியினை சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண். 2061/2009 ன் மூலம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துவிட்டேன் என்றும், எதிர்மனுதாரர்கள் இருவரும் சிறிது காலம் தனித்தனியாக தன்னை பராமரித்து வந்தும், தற்சமயம் 8 மாதங்களாக எதிர்மனுதாரர்கள் இருவரும் மனுதாரர்களாகிய எங்களை கவனிக்காமலும், எங்களுக்கான உண்ண உணவு, உடுக்க உடை, மருத்துவ வசதி, இருப்பிட வசதி எதுவும் செய்து கொடுக்காமல் எங்களை எதிர்மனுதாரர்கள் விரட்டி விட்டுவிட்டார்கள் என்றும், தாங்கள் இருவரும் கஷ்ட ஜீவனம் செய்து வாடகை வீட்டில் தனியாக குடியிருந்து போராடி வருகிறோம் என்றும், தனக்கு இருந்த 6 ஏக்கர் பூமியினை எதிர்மனுதாரர்களுக்கு சரிசமமாக பிரித்து கொடுத்துவிட்டு தனக்கென்று எவ்வித பூமியும் வைத்துக் கொள்ளவில்லை என்றும், தான் முதுமையின் காரணமாக உழைக்கவும் திறனற்று போய் உள்ளேன் என்றும், 2 ம் எதிர்மனுதாரர் தான் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியை 23 லட்சத்திற்கு விற்பனை செய்து அதன் மூலம் வந்த பணத்தினைக் கொண்டு 2 ம் எதிர்மனுதாரர் வசிக்கும்

இடமான அரை ஏக்கர் பூமியினை வாங்கி அதில் வீடுகட்டி கோழி பண்ணை மற்றும் மாடுகள் வைத்து அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டிவருகிறார்கள் என்றும், 2ம் எதிர்மனுதாரரின் கணவர் மின்சாரவாரியத்தில் பணிபுரிந்து ரூ.50,000/-த்திற்கு மேல் சம்பளம் பெற்று வருகிறார் என்றும், சிறுக சிறுக சம்பாத்திய பணத்தையும் எதிர்மனுதாரர்கள் வாங்கிக் கொண்டு கையில் பணமில்லாமல் தாங்கள் சிரமப்படுகிறோம் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தான் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியில் நன்கு விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ரூ.50,000/-க்கு மேல் சம்பாத்தியம் ஈட்டி வருகிறார் என்றும், தங்களின் நகையை விவசாயக் கடனுக்காக அடமானம் வைத்து விவசாயம் செய்தும் மேற்படி கடன் தொகையான ரூ.70,000/- மாநில அரசின் கடன் தள்ளுபடி திட்டத்தால் 1ம் எதிர்மனுதாரர் பயன்பெற்றும், தங்களை பராமரிக்க புறக்கணிக்கிறார் என்றும், 2ம் எதிர்மனுதாரர் பல பொய்யான காரணங்களை கூறி எதிர்மனுஉரை தாக்கல் செய்துள்ளார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் எதிர்மனுஉரை தாக்கல் செய்யாதால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறேன் என்றும், எதிர்மனுதாரர்களுக்கு நல்ல வசதி வாய்ப்பு இருந்தும், தன்னையும் தனது மனைவியையும் பராமரிக்காமல் வேண்டுமென்றே இருவரும் புறக்கணித்து வருகிறார்கள் என்றும், தங்களுக்கு எதிர்மனுதாரர்கள் மாதம் ரூ.14,000/- கொடுக்க கடமைப்பட்டவர்களாவார்கள் என்றும், மேற்கண்ட ஜீவனாம்ச தொகையை எதிர்மனுதாரர்கள் மாதம் தோறும் கொடுக்க முன்வராத நிலையில் தாங்கள் உயிர் வாழ்ந்திடுவது மிகவும் கடினமாகும் என்றும், மேற்கண்ட ஜீவனாம்சம் தங்களுக்கு வாழ்வதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும் என்றும், தங்களுக்கு இருமக்கள் இருந்தும் கவனிக்க ஆள் இல்லாமல் வயதான காலத்தில் ஒருவருடைய உதவியும் இல்லாமல் வாழ்வதற்கு போராடி வருகிறோம் என்றும், எதிர்மனுதாரர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.14000/- ஜீவனாம்சமாக அளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். இத்துடன் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

6. எ.ம.சா.1 அம்பிகா தனது சாட்சியத்தில், தான் மேற்படி வழக்கில் 2ம்எதிர்மனுதாரர் என்றும், தனக்கு வழக்கு பற்றி நன்கு தெரியும் என்றும்,

மனுதாரர்கள் தனது பெற்றோர்கள் என்றும், மனுதாரர்கள் மனுவில் தனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் செய்து கொடுத்து நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறோம் என்று கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரருக்கு 2 மகன்களும், தனக்கு 2 மகள்களும் உள்ளார்கள் என்றும் கூறியுள்ளது உண்மையாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் 1ம் மனுதாரர் கஷ்ட ஜீவனம் செய்து வந்த வருமானத்தின் மூலம் 22.06.1972ம் தேதியன்று சத்தியமங்கலம் சார்பதிவகஆவண எண்.1448/1972-ன்படி 6 ஏக்கர் பூமியினை கிரையம் பெற்று, விவசாயம் செய்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு என்னையும், 1ம் எதிர்மனுதாரரையும் காப்பாற்றியும், 1ம் எதிர்மனுதாரரை 7ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், தன்னை 11-ம் வகுப்பு வரை படிக்க வைத்தும், தனக்கு 7 பவுன் நகை போட்டு திருமண செலவுகள் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் தனக்கு திருமணம் ஆகாததற்கு முன்பே 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதியினை உயில் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் 1ம் மனுதாரர் கிரையம் பெற்ற 6 ஏக்கர் பூமியில் தனக்கு ஒதுக்கிய உயில் பூமியில் மனுதாரர் தார்சு வீடு கட்டி தான் திருமணத்திற்கு பின்னிட்டு மேற்படி வீட்டில் நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் 1ம் மனுதாரர் வீடுகட்டி வைத்தார் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் திருமணத்திற்கு பின்னிட்டு தானும், தனது கணவரும் ஆசை வார்த்தைகள் கூறி உயில் எழுதி வைத்ததை ரத்து செய்துவிட்டு மேற்கண்ட உயில் பூமியினை தனது பெயரில் 19.11.2008ம் தேதியில் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவணத்தில் 3 ஏக்கர் பூமியினை 1ம் மனுதாரர் தனது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்து விட்டார் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் தான் 1ம் மனுதாரர் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியை 23 லட்சத்திற்கு விற்பனை செய்து, அதன் மூலம் வந்த பணத்தைக் கொண்டு 2ம் எதிர்மனுதாரர் வசிக்கும் இடமான அரை ஏக்கர் பூமியினை வாங்கி அதில் வீடு கட்டி கோழிப் பண்ணை மற்றும்

மாடுகள் வைத்து அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வருகிறேன் என்றும், தனது கணவர் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ரூ.50,000/-த்திற்கு மேல் சம்பளம் பெற்று வருகிறார் என்றும், சிறுக சிறுக சம்பாத்திய பணத்தையும் தானும், 1ம் எதிர்மனுதாரரும் வாங்கிக் கொண்டு கையில் பணமில்லாமல் மனுதாரர்கள் சிரமப்படுகிறார்கள் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரர் செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த பூமியில் நன்கு விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ரூ.50,000/-க்கு மேல் சம்பாத்தியம் ஈட்டி வருகிறார் என்றும், மனுதாரர்களின் நகையை விவசாயக் கடனுக்காக அடைமானம் வைத்து விவசாயம் செய்தும், மேற்படி கடன் தொகையான ரூ.70,000/-ம் மாநில அரசின் கடன் தள்ளுபடி திட்டத்தால் 1ம் எதிர்மனுதாரர் பயன்பெற்றும், மனுதாரர்களை பராமரிக்க புறக்கணிக்கிறார் என்றும் கூறியுள்ளது உண்மையாகும் என்றும், மனுதாரர் மனுவில் நல்ல வசதி இருந்தும், மனுதாரர்களை பராமரிக்காமல் வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறேன் என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், மனுதாரர் மனுவில் மனுதாரர்களுக்கு நாங்கள் இருப்பிட வாடகைக்காக மாதம் ரூ.3000/-ம், உணவிற்காக மாதம் ரூ.5000/-ம், மொத்தம் ரூ.14000/-ம் தாங்கள் மனுதாரர்களுக்கு கொடுக்க கடமைப்பட்டவர்களாவோம் என்றும், மேற்கண்ட ஜீவனாம்ச தொகையை தாங்கள் மாதம்தோறும் கொடுக்க முன் வராத நிலையில் மனுதாரர்கள் உயிர் வாழ்ந்திடுவது மிகவும் கடினமாகும் என்றும், மேற்கண்ட ஜீவனாம்சம் மனுதாரர்களுக்கு வாழ்வதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும் என்றும், மனுதாரர்களுக்கு இரு மக்கள் இருந்தும், கவனிக்க ஆள் இல்லாமல் வயதான காலத்தில் ஒருவருடைய உதவியும் இல்லாமல் வாழ்வதற்கு போராடி வருகிறார்கள என்றும் கூறியுள்ளது சுத்தப் பொய்யாகும் என்றும், உண்மையில் 1ம் மனுதாரர் பெயரில் 6 ஏக்கர் பூமி இருந்தது உண்மையாகும் என்றும், மனுதாரர்கள் இருவருக்கும் வயதாகி விட்ட காரணத்தால் அவர்களால் பூமியில் விவசாயம் செய்ய இயலாததால் தனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் தலா பு.ஏ.2.87 விஸ்தீரணம் உள்ள பூமி எழுதி வைப்பதாகவும், மீதி 26 செண்ட் இடத்தை அவரது மகளான தனக்கு பு.ஏ.2.87

பூமியை தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார் என்றும், மீதி இருந்த 13 செண்ட் பூமியை மனுதாரர்களின் ஜீவனாம்சத்திற்காக 1ம் மனுதாரர் வைத்துக் கொண்டார் என்றும், பின்னிட்டு 1ம் எதிர்மனதாரர் மேற்படி 13 செண்ட் பூமியையும் சேர்த்து பு.ஏ.3.13 செண்ட் பூமியை 26 செண்ட் பூமியை 1ம் மனுதாரரிடமிருந்து எழுதி பெற்றுக் கொண்டார் என்றும், பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரர் சொத்தை பெற்ற பின்னிட்டு பெற்றோர்கள் என்கிற முறையில் மனுதாரர்களை பராமரிக்காமல் விட்டுவிட்டார் என்றும், தான் திருமணம் முடிந்து கணவர் வீட்டில் வசித்து வந்த போதிலும் மனுதாரர்களை அவ்வப்போது கவனித்தும், பராமரித்தும் வந்தேன் என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரர்களோ, 1ம் எதிர்மனுதாரரோ எவ்வித உதவியும், சீர் சிறப்பும் தனக்கு செய்ததில்லை என்றும், தனக்கு 1999ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றும், பின்னிட்டு 2000 வருடம் முதல் மனுதாரர்கள் இருவரும் தனது வீட்டில் தனது பராமரிப்பில் தான் இருந்தார்கள் என்றும், 2001-ம் வருடம் 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ரூ.10,00,000/- செலவு செய்து தான் வீடு கட்டினேன் என்றும், பின்னிட்டு விவசாய பூமியை ரூ.4,00,000/- செலவு செய்து சமன் செய்தார்கள் என்றும், மீண்டும் பூமியில் 4 முறை ஆழ்குழாய் கிணறு அமைத்ததற்கு தான் ரூ.4,00,000/- செலவு செய்தேன் என்றும், தான் மொத்தமாக ரூ.10,00,000/- 1ம் மனுதாரருக்கு செலவு செய்துள்ளேன் என்றும், பின்னிட்டு 1ம் மனுதாரர் 2ம் மனுதாரருடன் சண்டை போட்டு அவரை தள்ளிவிட்டதால் 2ம் மனுதாரருக்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது என்றும், அதற்கு 1ம் மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் அவரை பார்க்கவில்லை என்றும், தான் தான் ரூ.1,00,000/- செலவு செய்து 2ம் மனுதாரருக்கு எலும்பு முறிவு சிகிச்சை அளித்து சரி செய்தேன் என்றும், பின்னிட்டு 1ம் மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதில் அதற்கும் தான் தான் ரூ.1,50,000/- செலவு செய்து சரி செய்தேன் என்றும், தான் திருமணத்திற்கு பின்னிட்டும் கடந்த 14 வருடங்களாக மனுதாரர்களை நன்கு பராமரித்து அனைத்து செலவுகளையும் செய்து வந்தேன் என்றும், பின்னிட்டு 2008ம் வருடம் 1ம் மனுதாரர் தனக்கு எழுதி வைத்த

சொத்தை விவசாயம் செய்வதற்கு சௌகரியம் இல்லாததால் விற்பனை செய்ய முடிவு செய்து 2009 ம் வருடம் விற்பனை செய்து விட்டேன் என்றும், சொத்து விற்று வந்த பணம் முழுவதும் தான் மேற்படி பூமியில் வீடு கட்டியதற்கும், பூமி சமன் செய்ததற்கும், ஆழ்குழாய் கிணறு அமைத்ததற்கும் வாங்கிய கடனை திருப்பி செலுத்தத்தான் போதுமானதாக இருந்தது என்றும், மேலும் குடும்ப பெரியோர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தான் திருமணமான பெண்ணாக இருப்பினும், கடந்த 17.12.2008 ம் தேதியன்று 1 ம் மனுதாரர் பெயரில் ரூ.1,50,000/- சத்தியமங்கலம் பாரத ஸ்டேட் வங்கியில் டெபாசிட் செய்து வைத்தேன் என்றும், மேலும் 2 ம் மனுதாரருக்கு 5 1/2 பவுன் நகை செய்து அணிவித்தேன் என்றும், இவை அனைத்தையும் மனுதாரர்கள் பெற்றுக் கொண்டு தான் எதுவுமே செய்யவில்லை என்று பொய்யாக கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், தற்பொழுதும் மனுதாரர்கள் வட்டிக்கு பணம் கொடுத்து வட்டி வசூல் செய்து வருகிறார்கள் என்றும், மேலும் மனுதாரர்கள் இருவரும் தான் எதை செய்தாலும் அவற்றை எல்லாம் பெற்றுக் கொண்டு 1 ம் மனுதாரருடன் கூட்டு சேர்ந்து கொண்டு தன்னை சிரமப்படுத்தி பிரச்சனை செய்வதையே வாடிக்கையாக கொண்டுள்ளார்கள் என்றும், உண்மையில் தான் இரு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு சிரமப்பட்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறேன் என்றும், தனது கணவர் பெறும் சம்பளம் மனுதாரர்களுக்கும், மேற்படி சொத்திற்கும் நான் கடன் வாங்கி செலவு செய்த தொகைக்கு வட்டி செலுத்துவதற்கே போதுமானதாக இல்லை என்றும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ளதுபோல் தனக்கு எவ்வித வருமானமும் இல்லை என்றும், தனது கணவர் ரூ.50,000/- சம்பாதிப்பதில்லை என்றும், தனக்கு மனுதாரர்கள் கூறியது போல் எவ்வித அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், தான் ஜீவனாம்சம் கொடுக்கும் நிலையில் இல்லை என்றும், தான் எவ்வளவு சிரமம் இருப்பினும் பெற்றோர்கள் என்கிற முறையில் மனுதாரர்களை நல்ல முறையில் இதுவரை வாழவைத்து வந்தேன் என்றும், ஆனால் மனுதாரர்கள் அதை புரிந்து கொள்ளாமல் தன்னை சிரமப்படுத்துகிறார்கள் என்றும், மேலும் திருமணம் செய்து வேறு வீட்டிற்கு

வாழ சென்று விட்ட மனுதாரர்களின் மகளான தன்னிடம் ஜீவனாம்சம் கோருவதற்கு சட்டப்படி மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சட்டப்படி மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்க 1 ம் எதிர்மனுதாரர் மட்டுமே கடமைப்பட்டவர் ஆவார் என்றும், தன்னுடைய குறுக்கு விசாரணையில் 09.06.2010 ல் தான் விற்பனை செய்த சொத்து தொடர்பான வில்லங்க சான்று கணிணி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.7 என்றும், 08.04.2010 ல் தனது கணவர் ஏ.நாகராஜ் பெயரில் கிரையம் பெற்ற சொத்து தொடர்பான வில்லங்க சான்று கணிணி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.8 என்றும் கூறியுள்ளார்.

7. எ.ம.சா.2 பச்சாகவுண்டர் தனது சாட்சியத்தில், தான் மேற்படி வழக்கில் 3 ம் நபர் என்றும், தனக்கு வழக்கு பற்றியும், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் பற்றியும் நன்கு தெரியும் என்றும், மனுதாரர்களின் மகன் மற்றும் மகள் எதிர்மனுதாரர்கள் என்றும், உண்மையில் 1 ம் மனுதாரர் பெயரில் 6 ஏக்கர் பூமி இருந்தது என்றும், மனுதாரர்கள் இருவருக்கும் வயதாகி விட்ட காரணத்தால் அவர்களால் பூமியில் விவசாயம் செய்ய இயலாததால் 1, 2 ம் எதிர்மனுதாரர்களுக்கு தலா பு.ஏ.2.87 விஸ்தீரணம் உள்ள பூமி எழுதி வைத்ததாகவும் மீதி 26 செண்ட் இடத்தை அவரது ஜீவனத்திற்கு வைத்துக் கொள்வதாகவும் கூறி 1 ம் மனுதாரர் அவரது மகளான 2 ம் எதிர்மனுதாரருக்கு பு.ஏ.2.87 பூமியை தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றும், மீதி இருந்த 13 செண்ட் பூமியை மனுதாரர்களின் ஜீவனாம்சத்திற்காக 1 ம் மனுதாரர் வைத்துக் கொண்டார் என்றும், பின்னிட்டு 1 ம் எதிர்மனுதாரர் மேற்படி 13 செண்ட் பூமியையும் சேர்த்து பு.ஏ.3.13 செண்ட் பூமியை, 26 செண்ட் பூமியை 1 ம் மனுதாரரிடமிருந்து எழுதி பெற்றுக் கொண்டார் என்றும், பின்னிட்டு 1 ம் எதிர்மனுதாரர் சொத்தைப் பெற்ற பின்னிட்டு பெற்றோர்கள் என்கிற முறையில் மனுதாரர்களை பராமரிக்காமல் விட்டுவிட்டார் என்றும், 2 ம் எதிர்மனுதாரர் திருமணம் முடிந்து கணவர் வீட்டில் வசித்து வந்த போதிலும் மனுதாரர்களை அவ்வப்போது கவனித்தும் பராமரித்தும் வந்தார் என்றும், 2 ம் எதிர்மனுதாரருக்கு 1999 ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றும்,

பின்னிட்டு 2000 வருடம் முதல் மனுதாரர் இருவரையும் 2ம் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தார்கள் என்றும், 2001ம் வருடம் 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ரூ.10,00,000/- செலவு செய்து 2ம் எதிர்மனுதாரர் வீடு கட்டினார் என்றும், பின்னிட்டு விவசாய பூமியை ரூ.4,00,000/- செலவு செய்து சமன் செய்தார்கள் என்றும், மீண்டும் பூமியில் 4 முறை ஆழ்குழாய் கிணறு அமைத்ததற்கு 2ம் எதிர்மனுதாரர் ரூ.4,00,000/- செலவு செய்தார் என்றும், மொத்தமாக ரூ.10,00,000/- 1ம் மனுதாரருக்கு செலவு செய்துள்ளேன் என்றும், பின்னிட்டு 1ம் மனுதாரர் 2ம் மனுதாரருடன் சண்டை போட்டு தள்ளிவிட்டதில் 2ம் மனுதாரருக்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது என்றும், 1ம் மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் அவரைப் பார்க்கவில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் தான் ரூ.1,00,000/- செலவு செய்து 2ம் மனுதாரருக்கு எலும்பு முறிவு சிகிச்சை அளித்து சரி செய்தார் என்றும், பின்னிட்டு 1ம் மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது அதற்கும் 2ம் எதிர்மனுதாரர் ரூ.1,50,000/- செலவு செய்து சரி செய்தேன் என்றும், 2ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டும், கடந்த 14 வருடங்களாக மனுதாரர்களை நன்கு பராமரித்து அனைத்து செலவுகளையும் செய்து வந்தார் என்றும், பின்னிட்டு 2009ம் வருடம் 2ம் எதிர்மனுதாரர் சொத்தை விற்பனை செய்துவிட்டார் என்றும், சொத்து விற்று வந்த பணம் முழுவதும் 2ம் எதிர்மனுதாரர் மேற்படி பூமியில் வீடு கட்டியதற்கும், பூமி சமன் செய்ததற்கும், ஆழ்குழாய் கிணறு அமைத்ததற்கும் செலவு செய்தார் என்றும், மேலும் 2ம் எதிர் மனுதாரர் கடந்த 17.12.2008ம் தேதி அன்று 1ம் மனுதாரர் பெயரில் ரூ.1,50,000/- சத்தியமங்கலம் பாரத ஸ்டேட் வங்கியில் டெபாசிட் செய்து வைத்தார் என்றும், மேலும் 2ம் மனுதாரருக்கு 5 1/2 பவுன் நகை செய்து அணிவித்தார் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இரு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு சிரமப்பட்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், மேற்படி விவரங்கள் அனைத்தும் தனக்கு நேரில் நன்கு தெரியும் என்றும் கூறியுள்ளார். இத்துடன் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

8. 1ம் மனுதாரர் தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் உள்ளாரா என்றால் 2ம் எதிர்மனுதாரர் தன்னுடைய சாட்சியத்தில் தற்போது எனது தந்தை வெளியில் வாடகை வீட்டில் தங்கியுள்ளார். கடந்த 3 ஆண்டுகளாக நான் எனது பெற்றோர்களை பராமரிக்கவில்லை. இம்மனுதாரரிடம் கடந்த 3 ஆண்டுகளாக பேசுவதில்லை. பார்ப்பதில்லை. அவர்களை பற்றி எந்த விவரமும் தெரியாது என கூறியுள்ளதால் மனுதாரரும் 87 வயதுடையவர் என்பதால் தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர்கள் அப்பா என்ற முறையில் 1ம் மனுதாரருக்கு ஜீவனாம்சம் தர கடமைப்பட்டவர்கள். எதிர்மனுதாரர்களின் வருமானம் குறித்து பரிசீலிக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து கடந்த 2008ம் வருடம் நவம்பர் மாதம் 19ம் தேதி 2 ஏக்கர் 87 செண்ட் பூமியை எனக்கு தான செட்டில்மெண்ட் 1ம் மனுதாரர் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அது ம.சா.ஆ.4. மேற்படி பூமியில் கிணறு, மின்சார சர்வீஸ் உள்ளது என்றால் சரிதான். மீதி பூமியை 30.04.2009ம் தேதி எனது அண்ணனுக்கு செட்டில்மன்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அது ம.சா.ஆ.5. எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்கும்போது செட்டில்மெண்டின் அரசாங்க சொத்து மதிப்பு ரூ.13,90,000/- என்றால் சரிதான். மேற்படி சொத்தினை 23 லட்சத்திற்கு விற்பனை செய்ததாக கூறியுள்ளார்.

9. ஆக, 2ம் எதிர்மனுதாரர் மகள் என்ற முறையில் 1ம் மனுதாரரை பராமரிக்கும் அளவிற்கு வசதி உடையவர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முடிவாக 1ம் மனுதாரர் 87 வயது அடைந்தவர் என குறிப்பிட்டுள்ளதால் அவர் வாடகை வீட்டில் தங்கியுள்ளார் என்பதை 2ம் எதிர்மனுதாரர் ஒப்புக் கொண்டுள்ளதால் 1ம் மனுதாரரின் வயது ஜீவனாம்சம், மருத்துவ செலவுகள், வீட்டு வாடகை, அத்தியாவசியசெலவுகள் ஆகியவை உட்பட மாதம்ஒன்றுக்கு 1ம்எதிர்மனுதாரர் ரூ.2,500/-மும், 2ம் எதிர்மனுதாரர் ரூ.2,500/-மும் 1ம் மனுதாரருக்கு வழங்க வேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. 2ம் மனுதாரரை பொறுத்து கடந்த 17.11.2017 தேதியில் மனு திரும்ப பெற்றுக்கொள்ளப்பட்டது.

10. எனவே, முடிவாக 1ம் மனுதாரர் மனு அனுமதிக்கப்படுகிறது. 1ம் மனுதாரர் மனுதாக்கல் செய்த தேதியில் இருந்து 1, 2 எதிர்மனுதாரர்கள் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ செலவு, இதர பராமரிப்பு செலவு ஆகியவற்றிற்காக தலா ரூ. 2,500/- வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ. 5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்)ஐ பிரதி மாதம் 1 முதல் 5 ஆம் தேதிக்குள் 1 ம் மனுதாரரின் வங்கிக் கணக்கிலோ அல்லது நேரடியாகவோ செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2018ம் வருடம் ஜனவரி மாதம் 31ம் நாள் புதன்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம். கே. குமாரசிவம்,
நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

<u>பிற்சேர்க்கை:</u>
<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>

1. ம.சா.1 – கருப்பகவுண்டர்

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

1. ம.சா.ஆ.1 - மனுதாரர்களின் குடும்ப அட்டை ஜெராக்ஸ் நகல்.
2. ம.சா.ஆ.2 - 1 ம் மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல்.
3. ம.சா.ஆ.3 - 22.06.1972 ம் தேதிய கிரைய ஆவணம் ஜெராக்ஸ் நகல்.
4. ம.சா.ஆ.4 -19.11.2008 ம் தேதியிட்ட 1 ம் மனுதாரர் 2 ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர நகல்.
5. ம.சா.ஆ.5 - 30.04.2009 ம் தேதியிட்ட 1 ம் மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திர நகல்.
6. ம.சா.ஆ.6 - 2 ம் மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல்.
7. ம.சா.ஆ.7 - 09.06.2010 ல் விற்பனை செய்த சொத்து தொடர்பான வில்லங்க சான்று கணிணி பதிவிறக்க நகல்
8. ம.சா.ஆ.8 - 08.04.2010 ல் ஏ.நாகராஜ் பெயரில் கிரையம் பெற்ற சொத்து தொடர்பான வில்லங்க சான்று கணிணி பதிவிறக்க நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>

1. எ.ம.சா.1 – அம்பிகா
2. எ.ம.சா.2 – பச்சா கவுண்டர்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை.

ஒம். கே. குமாரசிவம்,
நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.